செ. கு. எண்: 120 நாள்:01.10.2019

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 1.10.2019

திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், கண்டிரமாணிக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. செல்வம் என்பவரின் குழந்தைகள் சிறுமி திவ்யா மற்றும் சிறுவன் ஸ்ரீராம் ஆகிய இருவரும் வீட்டிற்கு அருகில் உள்ள திருமலைராஜன் ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த போது, எதிர்பாராத விதமாக நீரில் மூழ்கியதில் சிறுவன் ஸ்ரீராம் சம்பவ இடத்திலேயும், சிறுமி திவ்யா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றியும் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், ஸ்ரீவாஞ்சியம் மற்றும் சேங்கனூர் கிராமங்களைச் சேர்ந்த திரு.கஞ்சமலை என்பவரின் மகன் சிறுவன் விக்னேஷ்வரன் மற்றும் திரு.நடராஜன் என்பவரின் மகன் சிறுவன் வெங்கடேஷ் ஆகிய இரண்டு சிறுவர்கள் புத்தாற்றில் குளிக்கச் சென்ற இடத்தில் நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து மிகுந்த வேதனை அடைந்தேன்.

நீரில் மூழ்கி உயிரிழந்த சிறுமி திவ்யா, சிறுவன் ஸ்ரீராம், சிறுவன் விக்னேஷ்வரன் மற்றும் சிறுவன் வெங்கடேஷ் ஆகியோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பள்ளிகளின் காலாண்டுத் தேர்வு விடுமுறை நாட்களில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளோடு நீர் நிலைகள், ஆறுகள் மற்றும் ஏரிகளில் குளிக்க செல்லும் போது, காவல் துறையினர் மற்றும் பொதுப்பணித்துறையினரால் அனுமதிக்கப்பட்ட இடங்களில் மட்டுமே குளிக்க வேண்டும் எனவும், குழந்தைகளை தனியாக நீர் நிலைகளில் குளிக்க அனுமதிக்க வேண்டாம் எனவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த சிறுமி திவ்யா, சிறுவன் ஸ்ரீராம், சிறுவன் விக்னேஷ்வரன் மற்றும் சிறுவன் வெங்கடேஷ் ஆகியோரின் குடும்பத்தினருக்கு **தலா ஒரு லட்சம் ரூபாய்** முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**